**IN THE XI ASSISTANT CITY CIVIL COURT, CHENNAI**

**O.S.No.3154/2023**

Name : Pitchaimuthu

Father/Husband's Name : Petchimuthu

Age : 54

Witness for Plaintiff/defendant : PW1

Solemnly affirmed in accordance with the provisions of Section X of Indian Evidence Act 1873 on the 13th day of February 2025.

---

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை –**

என்னுடைய பெயர் வயது என்ன என்றால் என்னுடைய பிச்சைமுத்து, வயது 54 ஆகும். நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் Department Store வைத்துள்ளேன். எத்தனை வருடமாக நடத்தி வருகிறேன் என்றால் 35 வருடமாக நடத்தி வருகிறேன். 1ம் பிரதிவாதியை எப்படி எனக்கு தெரியும் என்றால் நட்பு ரீதியாக தெரியும். அவர் அடிக்கடி வங்கிக்கு செல்வதன் மூலம் எனக்கு பழக்கம். நான் அவருக்கு எவ்வளவு தொகை கடனாக கொடுத்துள்ளேன் என்றால் 60 லட்சம் கொடுத்துள்ளேன். எதன் அடிப்படையில் அவருக்கு அவ்வளவு பணம் கொடுத்தேன் என்றால் தொழில் அடிப்படையில் கொடுத்தேன். நான் பிரதிவாதிக்கு எவ்வாறு அந்த தொகையை கொடுத்தேன் என்றால் காசோலை மூலமாக கொடுத்தேன். எத்தனை காசோலை கொடுத்தேன் என்றால் 2 காசோலை கொடுத்திருந்தேன். அந்த 2 காசோலைகளும் ஒரே நாளில் கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை. வேறு வேறு நாட்களில் கொடுத்தேன். நான் காசோலை மூலம் பணம் கொடுத்தார்க்கு அத்தாட்சியாக ஆவணம் ஏதும் தாக்கல் செய்துள்ளேன என்றால் இல்லை. என்னுடைய வங்கி கணக்கில் விவரம் உள்ளது தேவை என்றால் தாக்கல் செய்ய தாயாரக உள்ளேன். நான் அந்த காசோலையையில் யார் பெயரில் குறிப்பிட்டு கொடுத்திருந்தேன் என்றால் ஞாபகம் இல்லை. பிரதிவாதி பெயரில் ஒரு காசோலையும் மற்றும் அவர் கம்பொனி பெயரில் ஒரு காசோலை கொடுத்தாதாக ஞாபகம் உள்ளது. நான் சொல்வது உண்மை இல்லை என்றும் காசோலைகள் 1ம் பிரதிவாதி Sanjeevi பெயரில் கொடுக்கவில்லை என்றும் அவருடைய நிறுவனத்தின் பெயரில் தான்

கொடுக்கப்பட்டது என்று சொன்னால் எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. என்னுடைய வங்கி கணக்கு விவரங்கைளை பார்த்து தான் சொல்ல முடியும். பிரதிவாதி தான் வாங்கி கடனுக்கு எவ்வளவு ரூபாய் திருப்பி செலுத்தியுள்ளார் என்றால் ஒரு ரூபாய் கூட கொடுக்கவில்லை. அவர் ரூ.6,84,000/- ரூபாய்க்கு அசலுக்கும் வட்டிக்கும் 10 காசோலைகளை கொடுத்திருந்தார் மாதம் மாதம் அந்த காசோலைகள் அவர் சொல்லியவாரு வங்கியில் செலுத்த சென்ற போது அவர் வங்கியில் செலுத்த வேண்டாம் என்று என்னிடம் கேட்டுகொண்டார். பிரதிவாதியிடம் பணத்தை வசூல் செய்வதற்கு தாவா வழக்கு தவிர வேறு வழக்கு ஏதும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் 7th Additional City Civil Court, Chennai வழக்கு தாக்கல் செய்து 1ம்பிரதிவாதிக்கு எதிராக தீர்ப்பு பெற்றுள்ளேன். அந்த வழக்கில் யாரை பிரதிவாதிகளாக சேர்த்துள்ளேன் என்றால் Sanjeevi மற்றும் அவருடைய நிறுவனம் ஆனா Venkateshwara Paper Mills ஐ சேர்த்துள்ளேன். அந்த நிறுவனத்தில் 3,4 நபர்கள் Directors ஆக உள்ளபோது ஏன் Sanjeevi மட்டும் சேர்த்துள்ளேன் என்றால் அவர் தான் தொழிலில் முழுவதுமாக ஈடுபட்டுயிருந்தார். தாவா வழக்கில் நிறுவனத்தை சேர்க்காமல் Sanjeevi மற்றும் அவருடைய மனைவி மீது மட்டும் மற்ற Director ஐ சேர்க்காமல் ஏன் தாக்கல் செய்யப்பட்டது என்றால் Sanjeevi தான் என்னிடம் பணம் வாங்கியிருந்தார். அவர் மனைவி ஏன் பிரதிவாதியாக சேர்க்கப்பட்டது என்றால் அவர் நிறுவனத்தில் ஒரு பங்குதாரர் என்பதால் சேர்த்துள்ளேன். நான் கடன் வசூல் தீர்பாயத்தில் வழக்கு ஏதும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. இந்த வழக்கு எதற்காக நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் பணத்தை கொடுக்க வேண்டும் என்றும் அல்லது அவருடைய சொத்தை பணத்திற்காக கொடுக்கவேண்டும் என்று தாக்கல் செய்துள்ளேன். 2ம் பிரதிவாதிக்கு நான் கொடுத்த கடனில் எந்த வித சம்மந்தமும் இல்லாத போது அவரை வழக்கில் சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி நிறுவனத்தில் பங்குதாரராக உள்ளதாலும் என்னுடைய பணத்தை நிறுவனத்தில் தொழிலுக்கு முதலீடு செய்ததாலும் அவரை சேர்த்துள்ளேன். நான் வழக்கில் கோரியுள்ள பரிகாரம் கிடையக்கதக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

**(பொருண்மையை தெளிவு படுத்துவதற்காக வாதி வழக்கறிஞர் மறுவிசாரணைக்கு அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது.** )

என்னிடம் இருந்து 1ம் பிரதிவாதி வாங்கிய பணத்தில் என்ன செய்யதாக சொல்லி தாவா தாக்கல் செய்துள்ளேன் என்றால் தொழில் செய்து எனக்கு பணத்தை திருப்பி தராமல் தாவா சொத்து 2ம் பிரதிவாதி பெயரில் 1ம் பிரதிவாதி கிரையம் வாங்கியதாக நான் சொல்லியுள்ளேன். பிரதிவாதிகளுக்கு தாவா சொத்தை தவிர வேறு சொத்து உள்ளதாக என்றால் இல்லை.

<u>குறுக்கு விசாரணை</u>

இல்லை.

Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the Witness in the presence of the witness and admitted and signed by the witness to be correct.

XI Assistant Judge